# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

கருடபுராணத்தின் யமவாதைகளைப் படித்துவிட்டு கலங்கிப் போகிறார்கள் சில வாசகர்கள். இந்தக் கட்டுரைத் தொடரின் தலைப்பு 'வாழ்விக்கும் வைணவமா' 'பயமுறுத்தும் வைணவமா' என்று விசாரணைகள் வேறு! இதற்கு, திருமங்கையாழ்வார் ஒரு பதில் சொல்கிறார்:

சூதினைப்பெருக்கிக்களவினைத்துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்து
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
தொண்டனேன் நமன்தமர் செய்யும்
வேதனைக் கொடுங்கி நடுங்கினேன்
வேலைவெண்டிரை யலமரக் கடைந்த
நாதனே! வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய் !

வைணவருக்கு நரக பயமில்லை. எப்பேர்ப்பட்ட பாவமாய் இருந்தாலும் "ஸர்வ பாபேப்யோ" என்கிறபடி கண்ணன் மன்னித்தருள்வான். இன்றும் நமக்கு அருள, ஆசார்யபுருஷர்கள் இருக்கிறார்கள்! திவ்ய தேசங்கள் இருக்கின்றன! ஆழ்வார்களின் பாசுரங்கள் காட்டாற்று வெள்ளமாய் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. உடையவர் கருணையும் எம்பெருமான் திருவடி நிழலும் உள்ளவரை திருமால் அடியார்க்கு அச்சமில்லை. ஆனால் இவை இருக்கும் போது நமக்கென்ன கவலை? என்று எகத்தாளமாய் பாபஜீவியம் வாழ்ந்தால் மருந்துக்கு மிஞ்சிய நோய்போல கர்மா நம்மைப் பற்றும். அதைத் தவிர்த்து வைணவர்கள் இறை அச்சத்தோடு வாழ வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கட்டுரைத் தொடர்.

எம கிங்கரர்களால் நரகலோகத்துக்கு இழுத்துக் கொண்டு போகப்படும் ஜீவர்கள் ஒரு நீண்ட பயங்கரமான பாதையைக் கடந்து வைவஸ்வத பட்டணம் என்ற 'தண்டனை உலகத்தை' அடைய வேண்டும். நாள் ஒன்றுக்கு 247 காதவழி இரவும் பகலும் பசி தாகத்துடன் கரடு முரடாக நடந்து செல்ல வேண்டிய பாதை அது.

இந்த இடத்தில் இன்றைய பகுத்தறிவு இளைஞர்களுக்கு ஒரு வினா எழும். அதாவது நரகலோகம், பயங்கரமான யமதூதர்கள், இருண்டு நீண்ட பாதை என்பதெல்லாம் சின்னக் குழந்தைகளை அச்சுறுத்தும் சினிமாக்களில் பொருத்தமாயிருக்கலாம். மனிதன் சந்திரனில் வீடு கட்டலாமா? செவ்வாய் கிரகத்தில் நகர் அமைக்கலாமா? என்று சிந்தித்துக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில், விஞ்ஞானயுகத்தில், இப்படிப் பேய் பிசாசு பூச்சாண்டி கதையெல்லாம் சொல்லி எங்கள் காலத்தை ஏன் வீணடிக்கிறீர்கள் என்பது தான் அந்தக் கேள்வி! நம் கண்ணால் அன்றாடம் பார்க்கும் பருப்பொருள் உலகத்தைத் தவிர நுண் பொருள் உலகம் ஒன்று இருப்பதாக நம்புவது இன்றைய கம்ப்யூட்டர் உலக அறிவுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால் ஊனக்கண் பார்வைக்கு அப்பாற்பட்ட நுட்பமான உலகங்கள், பொருள்கள், சரீரங்கள், என்று இவையெல்லாம் இருப்பது உண்மையென்று தலைமுறை தலைமுறையாக நம் முன்னோர்

கள் அடித்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். இன்றைய மாணவனுக்குப் புரியும்படியான ஒரு உதாரணம் காட்டி இதை விளக்க வேண்டுமானால் நாம் அன்றாடம் இரவில் காணும் கனவுகளைப் பற்றிக் குறிப்பிடலாம். நாம் தூக்கத்திலிருக்கும் போது சிங்கம் விரட்டுவது போலவும், யானை மிதிப்பது போலவும் கனவு கண்டு அலறிப் புடைத்துப் படுக்கையில் எழுந்தமர்ந்து திரு திருவென்று விழிப்பதில்லையா? அப்போது இதயம் படபடக்கிறது! உடல் வியர்க்கிறது! படுக்கையில் மலஜலம் கழிப்பவர்கள் கூட உண்டு.

ஆனால் பக்கத்தில் படுத்திருப்பவன் யானையைக் காட்டு! சிங்கத்தைக் காட்டு! என்றால் இவனால் காட்ட முடியுமா? கனவில் கண்ட காட்சிப் பொருள்கள் கண் விழித்தவுடன் மறைந்து விட்டன என்பதற்காக அவை தோன்றவே யில்லை என்று சொல்ல முடியாது. அவை ஹிப்னாசிஸ் என்ற மனோவசியக் கலையினால் இன்னொருவரால் நம் அறிவில் ஏற்படுத்தப்பட்ட கற்பனை பிரம்மைகள் அல்ல. அவை வரவேண்டும் என்று நாமே வேண்டி விரும்பி ஏற்படுத்திக் கொண்டவையும் அல்ல. நம்மை மீறி நம் அனுமதியை எதிர் பார்க்காமல் தோன்றியவை அவை. கனவுடலங்கள் அல்லது ஸ்வப்ன சரீரங்கள் என்று நம் முன்னோர்கள் அவற்றைக் குறிப்பிடுகிறார்கள். அவை பொய்யல்ல. நிஜம் ! பச்சை நிஜம் !

டாக்டர் அறுத்துப் பார்க்கக் கூடிய பருப்பொருள். உடலாகிய இந்த சரீரத்தின் இதயத்தை வேகமாகத் துடிக்க வைக்கவும், வியர்வைப் பெருக்கை ஓடவைக்கவும் அந்த ஸ்வப்ன சரீரங்களால் முடியுமென்றால் அவற்றின் மகிமைதான் என்னே! இல்லவே இல்லாத பொய் பிம்பங்களாக அவற்றை எப்படி ஒதுக்க முடியும்? எல்லாவற்றையுமே மனோவசிய உணர்வலைகளுக்குச் சமமானவை என்று கூறி இன்னும் எத்தனை காலம் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருப்போம்? கனவில் கூட, அனுபவங்களால் பாவ புண்ணியங்கள் கழிகின்றன என்கிற நம் முன்னோர் கூற்றை முரட்டுப் பிடிவாதமாக நாம் ஏன் ஒதுக்க வேண்டும்? அவற்றில் உண்மையும் இருக்கலாம் என்று எடையீடு செய்தால் அதைத் தடுக்க எந்த விஞ்ஞானத்துக்கு சக்தி உண்டு?

நரகலோகம் யமவாதைகள் என்பவையெல்லாம் இதைப் போன்ற ஆக்கும் உலகங்கள்! நுண்பொருள் அநுபவங்கள்! கோள் நிலைகளை அளந்து பார்த்து இன்றைய விஞ்ஞானிகளும் வியக்கும் வண்ணம் பஞ்சாங்கங்கள் தயாரித்த நம் முன்னோர்களுக்கு– வெறும் மனப்ராந்தியால் சிருஷ்டிக்கப்படும் கற்பனைப் பேய் பிசாசுக்கதைகளுக்கும் மெய்யான நரகலோக அனுபவங்களுக்கும் பேதம்–தெரிந்திருக்குமா இல்லையா? அவர்கள் அவ்வளவு பச்சைக் குழந்தைகளா? நரகலோகம் என்பது அச்சுறுத்துவதற்காக எழுதப்பட்ட அண்டப் புளுகு என்பது உண்மையானால் ஆழ்வார்களும் முக்காலம் உணர்ந்த முனிவர்களும் அதை எண்ணிப் பயந்து இத்தனை சாத்திரங்கள் எழுதிக் காலம் காலமாக பாதுகாத்து நமக்கு விட்டுவிட்டுப் போயிருக்க வேண்டிய அவசியமில்லையே! இந்த முன்னுரையோடு, எமவாதைகளைப் பற்றி அடுத்த இதழில் விவரிக்கிறேன்.

(மாசி கீதாசர்யன் (377) இதழில் வெளிவந்த திரு ஜோசப் அவர்களின் கட்டுரையே மீண்டும் பங்குனி கீதாசார்யன் (378) இதழில் வெளியாகிவிட்டது. கவனக் குறைவால் ஏற்பட்ட இத்தவறுக்கு வருந்துகிறோம். –ஆசிரியர்)